முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 19 திகதி முதல்
சுபகிருது வருடம் ஆவணி மாதம் 26 திகதி வரை
(04.09.2022 ஞாயிறு முதல் 11.09.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானபலம் கொண்ட ஆளுமை
ஞாலமதில் அமைக்க வேண்டி
ஞானகுருவாய் வந்த அரங்கனே
ஞாலமதில் உமைபோற்றி அகத்திய மகரிஷி யானும்
2. யானும் இந்தியா தமிழகத்தில்
இயம்பிடுவேன் சுபகிருது யாளி திங்கள்
ஞானமுள மூவாறோர் திகதிமேல் இருபானாற் திகதிவரை
நடக்கின்ற வாரநிகழ்வாக வருங்கால பலனை
3. வருங்கால பலனாக வார ஆசியை
வழங்குவேன் இந்தவித காலம்
வருங்காலம் குறித்த திட்டங்களை
வல்லமைபட இந்தியா தமிழக ஆளுமை
4. ஆளுமைகள் பிழை நேராதவண்ணம்
அதிகாரங்களை பயன்படுத்தி முடிக்க
வலுவான வளர்ச்சிமிக்க பூமியாக
வந்தடையும் இந்தியா தமிழகம் தானும்
5. தானுரைக்க அரசின் செயல்திட்டம்
தரகரின்றி என்று மக்கள்தனை
ஊனமிலா அடைந்து பயனாகுதோ
உண்மைபட அன்றே ஞானஆட்சி காலமாகும்
6. காலமதில் கருணையே இல்லா
கடமையென்று கட்டுப்பாடுகளும்
கோலமதாய் மக்களை வாட்டினால்
கொடுங்கோல் எனும் நிலைக்கு மாறிடும்
7. மாறாமல் மக்கள் மனம்நோகாமல்
மனுதர்மம் காக்கும் தலைமையாக
ஆறுமுகனார் வழிபாட்டை செய்து
அறம் பெருக்கி உலகைகாக்கின்ற
8. காக்கின்ற சபையாக தலைமை
கட்டுப்பாட்டிலுள்ள வர்க்கங்கள்
தேக்கமின்றி தயவாக வடிவாக
தொண்டதனை செய்து வர

9. வருகவே கழனி நீர்நிதிநிலம்
வாகனம் மின் கல்வி நுட்பம்
தருமவழி நீதி அறம்துறையென
தாமுரைப்பேன் அனைத்தும் சிறந்து

10. சிறந்துமே ஞான பூமியாக
சேவைக்கு எந்த பஞ்சமும் இல்லா
சிறந்த ஞான ஆட்சியாக மாறும்
செப்பிய வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம்:

சுபகிருது வருடம் ஆவணிமாதம் 19ம் நாள் 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் 26ம் நாள் 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள்:

ஞானிகளின் அருளாசியுடன் ஞானபலம்மிக்கவர்களைக் கொண்டு உலகமெங்கும் உள்ள ஆளுமைகளை ஞான ஆளுமைகளாக ஆக்கிட வேண்டியே உலகினில் முருகப்பெருமான் தலைமையில் ஞான ஆட்சி அமைத்திட வேண்டியே முருகப்பெருமானின் சக்தி வடிவமாய் ஞானகுருவாய் வந்துதித்த ஆறுமுக அரங்க மகா தேசிகனே உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் ஆவணி மாதம் 19ம் நாள் 04.09.2022 ஞாயிற்று கிழமை முதல் ஆவணி மாதம் 26ம் நாள் 11.09.2022 ஞாயிற்று கிழமை முடிய உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசிநூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

வருங்காலத்திற்கான முன்னேற்பாடு மற்றும் நாட்டின் முன்னேற்றம் குறித்த திட்டங்களை வல்லமையுடன் எந்த வித பிழைகளும் நேராதவாறு அதிகாரங்களை பயன்படுத்தி குறைவின்றி செய்து முடிக்க வேண்டும் அவை எதிர்காலத்திற்கும் தேவையானவற்றை தருகின்ற திட்டங்களாக இருந்து செயல்படுத்திட இந்திய தமிழகம் வளர்ச்சி மிக்க தேசமாக ஆகிடும்.

இந்தியா தமிழகத்தில் அரசின் திட்டங்கள் எல்லாம் இடைத் தரகரே இல்லாமல் அறத்தின் திட்ட பயன்கள் எல்லாம் என்று நேரிடையாக மக்களை சென்றடைகிறதோ சென்று பயன் அடைகிறதோ அன்றே ஞான ஆட்சி காலமாகும்.

அதைவிடுத்து மக்கள் மீது கருணை கொள்ளாமல் இது அரசின் கடமை என பலவித கட்டுப்பாடுகளை போட்டு மக்களை வாட்டினால் நாட்டின் ஆட்சி கொடுங்கோல் ஆட்சி எனும் நிலைக்கு மாற வாய்ப்புள்ளது.

மக்களின் மனம் நோகாமல், தர்மத்தை காக்கும் விதமாக நடத்துதல் முருகப்பெருமான் வழிபாடுகளை செய்து தர்மத்தை அதிகமாக செய்து வந்து உலகை காக்கின்ற சபையாக தங்களது சபைகளை அதிகார வர்க்கங்கள் உருவாக்கி தயவே வடிவாக மக்களுக்கு தர்ம வழி நின்று சேவை செய்துவர வர விவசாயம், நீர்வளம், நிதித்துறை, வாகனத்துறை, மின்சாரத் துறை, கல்வித்துறை, தொழில்நுட்பத்துறை, அறநிலையத் துறை, நீதித்துறை என தேசத்தின் அனைத்து துறைகளும் சிறந்து விளங்கி இந்த தேசமே ஞான பூமியாக சேவைக்கு பஞ்சம் இல்லாத நல் தேசமாக ஞான தேசமாக மாறி ஞான ஆட்சியாக மாறிடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–